முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
தொழில்நுட்ப கல்விக் கிளை

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மாதிரிப் பரீட்சை வினாத்தாள் 2026

நுண்கலை | **84** | **T** | **I, II** | **3 மணித்தியாலம்**

நுண்கலை I

கவனிக்க:

(i) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

(ii) 1 தொடக்கம் 40 வகையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் 1,2,3,4 என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க.

(iii) உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள் புள்ளடி இடுக.

---

1. தேசிய வெளிநாட்டு சந்தைகளில் அதிக கேள்வி காணப்படுகின்ற சூழல் நேய கைவினை சார்ந்த நிர்மாணம் உற்பத்தி செய்யும் முறையானது,
   (1) நாரை காய வைத்து பின் வர்ணமூட்டப்பட்டு நெசவிடப்படும்.
   (2) நாரை அவித்து காய வைத்து வர்ணமூட்டப்பட்டு நெசவிடப்படும்.
   (3) நாரை அவித்து வர்ணமூட்டி காய விடப்பட்டு நெசவிடப்படும்.
   (4) நாரைக் கொண்டு நெசவிட்ட பின் வர்ணமூட்டி காய விடப்படும்.

2. கேத்திர கணித வரைதல்களில் கோடுகளை சமப் பகுதிகளாக சரியான அளவுகளில் பிரித்துக் கொள்வதற்காக பயன்படுத்தப்படும் உபகரணம் யாது?
   (1) பிரிக்கருவி
   (2) கவராயம்
   (3) வரைதல் கௌவிகள்
   (4) கோணமானி

3. திண்மவுருக்கள் வரையும் போது மறைந்திருக்கும் கோடுகளை காட்டுவதற்காக வரையப்படும் கோடானது,
   (1) தடித்த தொடர்கோடு
   (2) மெல்லிய தொடர்கோடு
   (3) மெல்லிய சங்கிலி கோடு
   (4) முறி கோடு

4. ஏதேனும் ஒரு புள்ளியில் இருந்து சம தூரத்தில் செல்லும் ஒழுக்கு வட்டம் என இனங்காணப்படும். தரப்பட்டுள்ள உருப்படத்தில் காட்டப்பட்டுள்ள வட்டத்தின் பகுதிகள் இரண்டை சரியாக குறிக்கும் விடையை தெரிவு செய்க?

   (1) பெரிய வட்டத்துண்டம், சிறிய வட்டத்துண்டம்
   (2) ஆரைச்சிறை, சிறிய வட்டத்துண்டம்
   (3) பெருவில், சிறு வில்
   (4) செவ்வன், பரிதி



Past Papers Wiki

முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

5. உருவில் காட்டப்பட்டுள்ள கேத்திர கணித வரைதல் இனங்கானப்படுவதானது,



(1) கூர்ங்கோணத்தை சம பகுதிகளாக பிரிக்கும் முறையாகும்.
(2) கோடு ஒன்றை சமப்பகுதிகளாக பிரிக்கும் முறையாகும்.
(3) நேர்கோடு ஒன்றை சமமான ஐந்து பகுதிகளாக பிரிக்கும் முறையாகும்.
(4) கோடுகள் இரண்டை ஒன்றுக்கொன்று தொடர்புபடுத்தும் முறையாகும்.

6. கீழே தரப்பட்டுள்ள பண்புகளைக் கொண்ட பல்கோணியை தெரிவு செய்க.
* பக்கங்கள் சமாந்திரமானவை
* பக்கங்கள் சமன், எதிர்கோணங்கள் சமன்

(1) சதுரம்
(2) சாய் சதுரம்
(3) இணைகரம்
(4) முக்கோணம்

7. உருளையின் விரியலை வரையும் போது விரியல் கோடுகளின் நீளம் அமைய வேண்டிய அளவானது,
(1) உருளையின் பரிதிக்கு சமனான தூரமாகும்.
(2) உருளையின் உயரத்துக்கு சமமான தூரமாகும்.
(3) உருளையின் முகத்திற்கு சமமான தூரமாகும்.
(4) வட்டத்தின் ஆரைகளுக்கு சமமான தூரமாகும்.

8. வட்டமொன்றின் ஆரையின் அளவை மாற்றாமல் பரிதியை சமபகுதிகளாக பிரித்து அமைக்கப்படும் பல்கோணி யாது?
(1) ஐங்கோணி
(2) சதுரம்
(3) தசகோணி
(4) அறுகோணி

9. அருகிலுள்ள உருவில் A எழுத்தில் காட்டப்பட்டுள்ள இரேகை இனங்காணப்படுவது,
(1) பேரச்சு
(2) சிற்றச்சு
(3) குவியம்
(4) செலுத்தலி



10. கால்பந்து விளையாட்டு உலகில் மிகவும் பிரசித்தி பெற்ற ஒரு விளையாட்டாகும். கால்பந்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பல்கோணிகளின் அளவைக் கொண்ட விடை எது?

(1) ஐங்கோணி, எண்கோணி
(2) அறுகோணி மாத்திரம்
(3) ஐங்கோணி, அறுகோணி
(4) ஐங்கோணி மாத்திரம்



11. புடவை அச்சிடலின் பிரதான ஊடகமான சாய வகை மற்றும் வர்ண கலவை பற்றி அறிவை பெற்றிருத்தல் அவசியமாகும். செங்காவி வர்ணத்தை தயாரிப்பதற்கான வர்ணங்களாவன,
(1) சிவப்பு, ஊதா
(2) சிவப்பு, செம்மஞ்சள்
(3) செம்மஞ்சள், மஞ்சள்
(4) மஞ்சள், சிவப்பு

முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

12. புடவை நெசவிடும் போது இயற்கை நார்களிலான நூல் வகைகளுக்கு பசையிடுதல் மேற்கொள்ளப்படும். பசையிடுவதால் கிடைக்கும் நன்மைகள் **அல்லாதது**,
(1) சாயம் இலகுவாக உறிஞ்சிக் கொள்ளப்படும்.
(2) நூலின் வலு அதிகரிக்கப்படும்.
(3) நூலில் ஏற்படும் பாதிப்புகள் தவிர்க்கப்படும்.
(4) நூல் உடையும் தன்மை குறையும்.

13. தரப்பட்டுள்ள உருவிலுள்ள அலங்காரத்தை அச்சிடுவதற்காக பயன்படுத்தப்படும் நிலையான அச்சுவகை என்ன?
(1) அமைக்கப்பட்ட அச்சு
(2) இயற்கை அச்சு
(3) துளைத்தகடு அச்சு
(4) டிஜிட்டல் அச்சு



14. வெப்ப ஓட்டு வேலை முறையில் பருத்தித் துணியை அலங்கரிப்பதற்காக பொருத்தமான வெப்ப ஓட்டு கடதாசி எது?
(1) நீல லேபிள் கடதாசி
(2) பச்சை லேபிள் கடதாசி
(3) ஊதா லேபிள் கடதாசி
(4) சிவப்பு லேபிள் கடதாசி

15. அறிவித்தல், போஸ்டர், அழைப்பிதழ் போன்றவற்றை அச்சிடுவதற்காக மிகவும் பொருத்தமான அச்சிடல் முறை எது?
(1) ஸ்டென்சில்
(2) அச்சுப்பதித்தல்
(3) திரைச்சட்ட அச்சிடல்
(4) கையால் வரைதல்

16. பத்திக் செயல்முறையின் படிமுறைகள் சில தரப்பட்டுள்ளன.
A - அலங்காரத்தின் பகுதிகளுக்கு மெழுகு இடல்.
B - அலங்காரம் உள்ள புடவையை சட்டகத்தில் பொருத்துதல்.
C - சாயக் கலவையை தயாரித்தல்.
D - வர்ணமூட்டலின் பின் உலர விடல்.
E - மெழுகு கலவையை தயார் செய்தல்.
பத்திக் செயன் முறையை ஒழுங்கு முறையில் காட்டும் விடையை தெரிவு செய்க.
(1) ECBAD (2) BEDAC (3) BCAED (4) BEACD

17. நீர் உறிஞ்சும் தன்மை, அதிக வெப்பத்திற்கு தாக்குப்பிடித்தல், மின் தாக்கத்தை தடுத்தல் போன்ற பண்புகளைக் கொண்ட நார் வகை எது?
(1) சணல் (2) பருத்தி (3) ஜூட் (4) நியந்த

18. 100 சென்றிமீட்டர் நீளமுடைய இடைப்பட்டி ஒன்று தயாரிப்பதற்காக 12 டெப்லட்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு தேவையான நூல்களின் எண்ணிக்கையை கணிக்குக.
(1) 48 ஆகும் (2) 12 ஆகும் (3) 24 ஆகும் (4) 19 ஆகும்

19. மெட்ரிக் இலக்கம் 18^S யை கொண்ட நூல் கட்டின் நிறை 5 கிலோகிராம் ஆகும். இந்நூல் கட்டில் அடங்கும் நூல் சிட்டைகளின் எண்ணிக்கை யாது?
(1) 120 (2) 90 (3) 100 (4) 80

முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

20. கைக்குட்டை ஒன்று நெசவு செய்வதற்காக 60 இருபட்டு நூல் சிட்டைகள் செலவாகின. ஒரு கிலோகிராமில் 50 நூல் சிட்டைகள் அடங்கியிருக்குமாயின் அந்த நூலின் இலக்கம் யாது?
(1) 50^S ஆகும். (2) 60^S ஆகும். (3) $2^S/120$ ஆகும். (4) $2^S/100$ ஆகும்.

21. ஒரு சென்றிமீட்டருக்கு 40 நூல்கள் என்ற விகிதத்தில் இல $2/20^S$ இரட்டை புரி நூல்களைப் பயன்படுத்தி 50 மீட்டர் நீளமான நூல் பாவு தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் அகலம் 30 சென்றிமீட்டர் எனில் நூற்பாவில் உள்ள நூற்புரிகளின் எண்ணிக்கை யாது?
(1) 40x30=1200 (2) 40x50=2000 (3) 20x50=1000 (4) 20x40=800

22. மேசை துணி ஒன்று நெசவு செய்வதற்காக நீள நூல்கள் இரண்டும் பாவு நூல்கள் ஒன்றும் கொண்ட நெசவு கோலம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்நெசவில் நூல் எழுப்பல்கள் தெரியும் விதத்தை தரப்பட்டுள்ள உருப்படத்திலிருந்து தெரிவு செய்க.



(1) (2) (3) (4)

23. சாதாரண அகலத்தில் துவாய் போன்ற புடவைகளை நெசவுடுவதற்காக பயன்படுத்தக்கூடிய நெசவு இயந்திரம் யாது?
(1) எளிய நெசவுத்தறி (2) மேசைத் தறி
(3) பறக்கும் நாடா தறி (4) மின்சாரத் தறி

24. நீரை உறிஞ்சும் தன்மை அதிகம் கொண்ட புடவைகளுக்காக நெசவிடக்கூடிய நெசவுக்கோல வகையானது எது?



(1) (2) (3) (4)

25. புடவை நெசவிடல் செயன் முறையில் கை இயந்திரத்தில் கம்பியை ஆதாரமாகக் கொண்டு நெம்புகோலை பொருத்திக் கொள்வதானது,
(1) தறிச் சட்டத்தில் (2) பொருத்துச் சட்டத்தில்
(3) நெம்புகோலில் (4) சீப்பு சட்டத்தில்

26. கற்பாறை உக்கலடைந்து சிதறும் போது மண் உருவாகிறது. இதில் மிகச்சிறிய துணிக்கைகளே களி ஆகும். களித்துணிக்கையின் அளவு யாது?
(1) 0.02mm (2) 0.2mm (3) 0.020mm (4) 0.002mm

27. களியின் இழுபடும் விகிதம் அதிகமாக காணப்படும் போது பயன்படுத்தக்கூடிய மிகப் பொருத்தமான ஒட்டாத மூலப் பொருள் யாது?
(1) கயோளின் (2) பந்துக்களி (3) பெல்ஸ்பார் (4) பெந்தனைட்

முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

28. அமைத்தல் முறையில் மட்பாண்டங்களை நிர்மாணிக்கும் போது முதலில் திட்டமிடக்கூடிய படிமுறையானது,
(1) உரு வலையை தயாரித்தல். (2) களியை அப்புதல்.
(3) திட்டப் படம் வரைதல். (4) சமநிலை பற்றி கவனம் எடுத்தல்.

29. A - களியை மையப்படுத்தல்.
B - களியை வனைதல் சில்லில் வைத்தல்.
C - நேர்த்தியாக்கள்.
D - பாண்டத்தின் சுவரை உயர்த்துதல்.
வனைதல் சில்லை பயன்படுத்தி பாண்டமொன்று கட்டியெழுப்பும் படி முறையை சரியான ஒழுங்கில் காட்டும் விடை எது?
(1) BADC (2) BDAC (3) BCDA (4) ABCD

30. ஒட்சிசன் வாயு உள்ள சூழலில் மண்பாண்டங்கள் சுடப்படும் சந்தர்ப்பத்தை சரியாக கூறும் விடை,
(1) ஒட்சி தாழ்த்தல் (2) ஒட்சியேற்றல்
(3) நிறமாற்றம் (4) ஒடுங்குதல்

31. உணவு சமைக்கும் மற்றும் பரிமாறும் பாத்திரங்களுக்கு குறைவெப்ப மினுக்க/மெருகு கலவையை **பயன்படுத்தாமைக்கான** காரணம் என்ன?
(1) மினுக்க கலவையில் பொரெக்ஸ் பயன்படுத்துவதால்.
(2) மினுக்க கலவையில் லெட்ஒக்சைட்டு பயன்படுத்துவதால்.
(3) மினுக்க கலவையில் பலவித சாம்பல் வகைகள் பயன்படுத்துவதால்.
(4) மினுக்க வகைகளில் டொலமைட் பயன்படுத்துவதால்.

32. தரப்பட்டுள்ள உருப்படத்தில் காட்டப்பட்டுள்ள அலங்காரம் எவ்வகை வேலைக்குரியது,



(1) ரிபன் எம்ப்ரோய்டிங்
(2) வலை துணி வேலை
(3) கைப்பின்னல் வேலை
(4) வெட்டு துணி வேலை

33. ரிப்பன் மூலம் அயிடா துணியில் அலங்கார தையல்களை மேற்கொள்ளும் போது பயன்படுத்தப்படும் ஊசி வகை யாது?
(1) முனை கூரான டெப்பஸ்டி ஊசி (2) முனை கூரான நூல் கோர்க்கும் ஊசி
(3) முனை கூரான மலர் தைக்கும் ஊசி (4) முனை மழுங்கிய டெப்பஸ்டி ஊசி

34. வூல் நூல் நிர்மாணப் பின்னல்களின் போது பல்வேறு அளவுகளில் பின்னல் ஊசிகள் சந்தையில் கிடைக்கின்றன. குழந்தை தொப்பி ஒன்று பின்னுவதற்காக பயன்படுத்தப்படும் பின்னல் ஊசியின் இலக்கமானது,
(1) 12 ஆகும். (2) 10 ஆகும். (3) 14 ஆகும். (4) 13 ஆகும்.

35. மலர்மாலைகள், பூச்செண்டுகள் என்பன தயாரிக்கும் போது மலர்கள் மற்றும் இலைகள் விரைவில் வாடி போவதை தடுப்பதற்காக பயன்படுத்தக்கூடிய மிகப் பொருத்தமான ஆலோசனையானது,
(1) நீரில் நனைத்த வெட்போர்மை மலர்காம்புகளின் அடியில் சுற்றிக்கொள்ளல் ஆகும்.
(2) அஸ்பிரின் இடப்பட்ட நீரில் மலர், இலைகளை நனைத்து எடுத்தலாகும்.
(3) நீரில் நனைத்த பஞ்சு துண்டை மலர்காம்பின் அடியில் சுற்றிக்கொள்ளலாகும்.
(4) சவர்க்காரம் கலந்த நீரில் மலர், இலைகளை அமிழ்த்தி எடுத்தலாகும்.

முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

36. செயற்கை ஆபரணங்களை தயாரிக்கும் போது மணி முத்துகளை பொருத்திக் கொள்வதற்காக பல்வேறு நூல் வகைகள் பயன்படுத்தப்படுகின்றன. கைக்காப்பு ஒன்றை தயாரிப்பதற்கு பொருத்தமான நூல் வகைகளை கொண்ட விடை தொகுதியை தெரிவு செய்க,
(1) தங்கூசி, வுல்நூல், கோர்ட் நூல்
(2) தங்கூசி, நைலோன் நூல், மெல்லிய கம்பி
(3) கழிநூல், நைலோன் நூல், கோர்ட் நூல்
(4) தங்கூசி, நைலோன் நூல், கழி நூல்

37. இலகுவான பாரமற்ற விளையாட்டுப் பிராணிகளை நிர்மாணிக்கும் போது மாதிரி அச்சிலிருந்து (Block) துணியில் தையலுக்காக விடப்படும் இடைவெளியின் அளவு என்ன?
(1) 0.5cm
(2) 1cm
(3) 1.5cm
(4) 2cm

38. சிறுபிள்ளைகளின் விளையாட்டுப் பொருளான பென்குவினை நிர்மாணிப்பதற்கு மிகப் பொருத்தமான துணி வகையானது,
(1) போவா துணியாகும்.
(2) ஹைபைல் துணியாகும்.
(3) வெல்போவா துணியாகும்.
(4) பொல்ட் துணியாகும்.

39. கடதாசியிலான மலர்களுக்கு மெழுகு இடும் போது மெழுகு கலவை பாத்திரத்தை கொதி நீர் பாத்திரத்தினுள் வைத்து மலர்களை மெழுகினுள் அமிழ்த்துவதற்கான பிரதான காரணமானது,
(1) மெழுகு விரைவில் இறுகி விடுவதை தவிர்ப்பதற்காக
(2) மெழுகின் வர்ணம் மாறாமல் இருப்பதற்காக
(3) மெழுகு தீப்பற்றுவதை தவிர்ப்பதற்காக
(4) மெழுகிலிருந்து கரிய புகை வராமல் இருப்பதற்காக

40. பூங்கா அலங்கரிப்புகளில் சிலை ஒன்று நிர்மாணிக்கும் போது சிலையின் வடிவத்தை அமைத்துக் கொள்வதற்காக பயன்படுத்தப்படும் கம்பி வலை யாது?
(1) மெக்சி வலை
(2) சதுர வலை
(3) கோழி கூட்டு வலை
(4) பிளாஸ்டிக் வலை

முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
தொழில்நுட்ப கல்விக் கிளை

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மாதிரிப் பரீட்சை வினாத்தாள் 2026

நுண்கலை | **84** | **T** | **I, II**

நுண்கலை II

முதலாம் வினாவுக்கும் ஏனையவற்றுள் எவையேனும் **நான்கு** வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்குக.

1. உங்கள் வலயக் கல்வி பணிமனையால் நுண்கலைப் பாடத்துடன் தொடர்பான கண்காட்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக உங்கள் பாடசாலையின் மாணவர்களையும் பங்குபற்ற செய்யுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.
   (i) இக்கண்காட்சி தொடர்பாக மாணவருக்கு அறிவுறுத்துவதற்காக பொருத்தமான சுவரொட்டி (போஸ்டர்) ஒன்றை வரைக.
   (ii) கண்காட்சிக்கு பொருத்தமான கடதாசி ஊடகத்திலான அழைப்பிதழ் ஒன்றை வரைக.
   (iii) உங்கள் பாடசாலையின் மாணவர்களை இனங்கண்டு கொள்வதற்காக இலச்சினை ஒன்றை வடிவமைத்து வரைக.
   (iv) உற்சவம் ஆரம்பித்தலின் போது விளக்கேற்றுவதற்காக விளக்கு ஒன்றை நிர்மாணிப்பதற்கு பொருத்தமான இயற்கையிலான பொருட்கள் இரண்டு எழுதுக?
   (v) கண்காட்சியில் வைப்பதற்காக ஆபரண தொகுதி ஒன்றை நிர்மாணிப்பதற்கு பொருத்தமான மூலப்பொருட்கள் இரண்டு தருக?
   (vi) கண்காட்சியில் வைக்கும் அறிவித்தல் பலகையை அலங்கரிப்பதற்காக அதில் பொருத்தக் கூடிய மலர் அலங்காரம் ஒன்று வரைக.
   (vii) ஏற்பாட்டு குழுவினர் அணியும் டி-சேர்ட்டுக்கு பொருத்தமான அச்சிடல் முறைகள் இரண்டு கூறுக?
   (viii) கண்காட்சியில் வைப்பதற்காக மேசைபாய் (Tablemat) நிர்மாணிப்பதற்கு பயன்படுத்தக்கூடிய நெசவு கோலங்கள் இரண்டு எழுதுக?
   (ix) பங்கு பற்றிய பாடசாலைகளுக்கு வழங்கும் கேடயங்களை இடுவதற்காக பொருத்தமான பொதியுறை ஒன்றை வரைக.
   (x) கண்காட்சியில் வைத்துள்ள மேசைபாய் ஒன்றின் உற்பத்தி செலவு ரூ.400.00 ஆகும். 15 வீத இலாபத்துடன் விற்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது எனின் ஒரு மேசைபாயின் விற்பனை விலை யாது?
   (2x10 = 20 புள்ளிகள்)

2. பல்வேறு வகையான நிர்மாணங்களை திட்டமிடும்போது கேத்திர கணித வடிவங்களை பயன்படுத்துவது மிகவும் பொருத்தமாக அமையும்.
   (i) 5cm ஆரைக்கொண்ட வட்டம் ஒன்று வரைந்து அதனை 12 சமப்பகுதிகளாக பிரிக்குக. (2 புள்ளி)
   (ii) தரப்பட்டுள்ள தள வடிவங்களில் காணப்படும் பண்புகள் இரண்டு வீதம் எழுதுக.
   * செவ்வகம் * இணைகரம் (4 புள்ளி)
   (iii) பக்கம் ஒன்று 6cm நீளம் கொண்ட ஐங்கோணி ஒன்றை விரும்பிய முறையை பயன்படுத்தி வரைக. (4 புள்ளி)

முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

3. வீட்டு உள்ளக அலங்காரத்திற்காக பல்வேறு அலங்கார நிர்மாணங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
   (i) ரிப்பன் எம்ரோய்டிங் நிர்மாணத்திற்கு பொருத்தமான தையல் முறைகள் இரண்டு தருக. (2 புள்ளி)
   (ii) மலர் அலங்கார தயாரிப்புகளுக்காக பயன்படுத்தக்கூடிய இயற்கை மற்றும் செயற்கை மலர்களின் நன்மைகள் இரண்டு வீதம் எழுதுக. (4 புள்ளி)
   (iii) திரைச்சட்ட அச்சிடல் (Screen Printing) முறையை பயன்படுத்தி தலையணை உறை ஒன்றை அலங்கரிக்கும் முறையை விளக்குக. (4 புள்ளி)

4. கை துடை துணி ஒன்றை நெசவிடுவதற்காக தயாரிக்கப்பட்ட பருமட்டான வரிப்படம் மற்றும் அதன் விளக்கம் கீழே காட்டப்பட்டுள்ளது.
   பாவின் நீளம் 50m
   பாவின் அகலம் 40cm
   ஒரு சென்றிமீற்றரிலுள்ள நீள நூல்கள் 60 ஆகும்.
   நீளநூல் இலக்கம் $2/40^{S}$ ஆகும்.



   (i) கை துடைப்பை நெசவிடுவதற்காக பொருத்தமான நெசவு கோலம் இரண்டு பெயரிடுக. (2 புள்ளி)
   (ii) நீங்கள் குறிப்பிட்ட நெசவுக்கோலத்தின் இரண்டு அலகுகளை வரைபுபடுத்துக. (4 புள்ளி)
   (iii) கை துடைப்பை நெசவிடுவதற்கு தேவையான நீள நூல்களின் நிறையை கணிப்பிடுக. (4 புள்ளி)

5. புடவை உற்பத்திகளில் புடவை நெசவு மற்றும் புடவை அலங்காரம் பற்றிய அனுபவம் இருத்தல் மிக முக்கியமாகும்.
   (i) நெசவு இயந்திரத்தில் நூல் இழுத்தலுக்காக பயன்படுத்தப்படும் உபகரணங்கள் இரண்டு பெயரிடுக. (2 புள்ளி)
   (ii) முற்சுத்த முறைகள் இரண்டைப் பெயரிட்டு அதில் ஒன்று பற்றி சுருக்கமாக விளக்குக. (4 புள்ளி)
   (iii) பாரமற்ற விளையாட்டுப் பொருட்களை தயாரிக்கும் போது பென்குவின் தயாரிக்கும் முறையை விளக்குக. (4 புள்ளி)

6. களிவளம் பூமியில் படுக்கையாக காணப்படுவதுடன் அதனை அகழ்ந்தெடுத்து பதப்படுத்தி பாண்டங்களை தயாரிக்க முடியும்.
   (i) அடிப்படை சுடுதல் மூலம் நிர்மாணிக்கக் கூடிய பாண்டங்கள் இரண்டு பெயரிடுக. (2 புள்ளி)
   (ii) சுடப்பட்ட பாண்டங்களுக்காக செய்யக்கூடிய அலங்கார முறைகள் நான்கு கூறுக. (4 புள்ளி)
   (iii) களிச்சுருள் அல்லது களிப்பாளம் முறையின் மூலம் பாண்டமொன்று தயாரிக்கும் முறையை விளக்குக. (4 புள்ளி)

7. நிகழ்கால சமூகத்தில் பூங்கா அலங்கரிப்புகளுக்காக அதிக கேள்வி நிலவுகிறது.
   (i) பூங்கா சிற்பங்களை கட்டி எழுப்பும் நுட்ப முறைகள் இரண்டு கூறுக? (2 புள்ளி)
   (ii) பூங்கா நிர்மாண கோட்பாடுகள் நான்கு கூறி அவற்றுள் இரண்டை விளக்குக. (4 புள்ளி)
   (iii) பாடசாலை நூலகத்திற்கு முன்னால் உள்ள பூங்காவிற்கு பொருத்தமான சுவர் செதுக்கல் ஒன்றை நிர்மாணிக்கும் முறையை படிமுறையில் விளக்குக. (4 புள்ளி)

PAST PAPERS WIKI

Past Papers Wiki

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு தொழில்நுட்ப கல்விக் கிளை
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மாதிரிப் பரீட்சை வினாத்தாள்
2026

விடைகள் (Answers)

பாடம் : 84 – நுண்கலை (Art and craft) I,II தரம் : 11

வினா இல	விடை இல	வினா இல	விடை இல	வினா இல	விடை இல	வினா இல	விடை இல
01	2	11	2	21	1	31	2
02	1	12	1	22	3	32	4
03	4	13	1	23	1	33	4
04	1	14	4	24	2	34	1
05	3	15	3	25	2	35	3
06	2	16	4	26	4	36	2
07	1	17	2	27	3	37	2
08	4	18	1	28	3	38	4
09	4	19	2	29	1	39	3
10	3	20	4	30	2	40	3

பகுதி – II

1. I. தலைப்புக்கு பொருத்தமான சுவரொட்டி ஒன்றை வரைந்து அதில் திகதி, நேரம், இடம் என்பன உள்ளடக்கப்பட்டிருத்தல்.
   II. தலைப்புக்கு பொருத்தமான அழைப்பிதழ் ஒன்றின் முகப்பை வரைந்திருத்தல்.
   III. நிர்மாணத்திறன் மிக்க இலச்சினை வரைந்திருத்தல்.
   IV. இயற்கை பொருட்கள் - வாழைத்தண்டு, மூங்கில் தண்டு, மரம்
   போன்ற ஏதேனும் இரண்டை எழுதியிருத்தல்.
   V. மூலப்பொருட்கள் - களி, அரிமரம், முத்து மணிகள், கடதாசி, பான்கிளே, சோளமா கிளே
   போன்ற ஏதேனும் இரண்டை எழுதியிருத்தல்.
   VI. அறிவித்தல் பலகைக்கு பொருத்தமான மலர் அலங்காரம் வரைந்திருத்தல்.
   VII. அச்சிடல் முறைகள் - திரைச்சட்ட அச்சிடல், ஸ்டென்சில் அச்சிடல், டிஜிட்டல் அச்சிடல்
   போன்ற ஏதேனும் இரண்டை எழுதியிருத்தல்.
   VIII. நெசவு கோலங்கள் - எளிய நெசவு, பாய் நெசவு, பாவு விலா நெசவு, குறுக்கு ஓர நெசவு
   போன்ற ஏதேனும் இரண்டை எழுதியிருத்தல்.

   IX. பொருத்தமான பொதியுறை ஒன்றை வரைந்திருத்தல்.
   X. $400 \text{ X} \frac{15}{100} = 60$ ரூ
   $400 + 60 =$ ரூ 460.00

(புள்ளிகள் - 2X10=20)

2. I.  அளவு திட்டப்படி வரைந்திருத்தல். (புள்ளிகள் 2)

   II. A – எதிர் எதிர் பக்கங்களின் நீளங்கள் சமன்.
   எதிர் எதிர் பக்கங்களின் நீளங்கள் சமாந்திரம்.
   கோணங்கள் நான்கும் 90°
   B - எதிர் எதிர் பக்கங்களின் நீளங்கள் சமன்
   எதிர் எதிர் பக்கங்கள் சமாந்திரம்
   எதிர் கோணங்கள் சமன்
   இதில் இரண்டு வீதம் எழுதிருத்தல். (புள்ளிகள் 4)

   III. பக்கம் ஒன்று 6cm கொண்ட ஐங்கோணி வரைந்திருந்தல்.
   (தரம் 10 பாடநூல் - பக்கம் 43) / (தரம் 11 பாடநூல் - பக்கம் 9,10) (புள்ளிகள் 4)
   (மொத்த புள்ளிகள் 10)

3. I. ரிபன் தையல், லேசி டெயிசி தையல், பிரெஞ் முடிச்சு, நேர் தையல், தண்டு தையல், லூப் தையல் ஏதேனும் இரண்டு எழுதியிருப்பின் (புள்ளிகள் 2)

II. இயற்கை மலர்கள் - புதிய தன்மை, வாசணை, உண்மைத்தன்மை, அழகிய வர்ணம்
செயற்கை மலர்கள் - அழகு, தேவையான பல வர்ணங்கள், நீண்ட கால பாவணை, கொண்டு செல்ல இலகு தன்மை, நிறை குறைவு.
போன்ற இரண்டு வீதம் எழுதியிருந்தால், (புள்ளிகள் 4)

III.

- தலையணை உறைக்கு பொருத்தமான துணியை தெரிவு செய்தல்.
- துணியை முற்சுத்தம் செய்தல்.
- துணியை அச்சிடல் தளத்தில் சரியாக பொருத்தி வைத்தல்.
- துணியின் மீது தயாரித்துக்கொண்ட திரைச்சட்ட அச்சிடல் சட்டகத்தை வைத்தல்.
- விரும்பிய வர்ணத்தை ஓரத்தில் சிறிதளவு இடுதல்.
- வர்ணத்தை ஸ்குவிஜி மூலம் அலங்காரம் மீது பரவச்செய்தல்.
- மெதுவாக திரை சட்டகத்தை துணியிலிருந்து அகற்றுதல்.
- அச்சிடப்பட்ட துணியை நிழலில் நன்றாக உலர்த்துதல்.
- வர்ணத்தை நிலைப்படுத்துவதற்காக சூடான அழுத்தியினால் அழுத்துதல்.

(புள்ளிகள் 4)
(மொத்த புள்ளிகள் 10)

4. I. எளிய நெசவு, பாய் நெசவு, பாவு விலா நெசவு, குறுக்கு ஓர நெசவு
இதில் ஏதேனும் இரண்டு எழுதியிருப்பின் (புள்ளிகள் 2)

II. மேற்குறிப்பிட்ட நெசவு கோலம் இரண்டின் நெசவு அலகுகள் இரண்டு வரைந்திருப்பின் (புள்ளிகள் 4)

III. பாவின் நீளம் × அகலம் × 1cm இல் உள்ள நூல்கள்

ஒரு சிட்டையில் உள்ள நூலின் நீளம் × நூல் இலக்கம்

$$\frac{50 \times 40 \times 60 \times 2}{1000 \times 40}$$

$= 6$ km

சமன்பாட்டை சரியாக எழுதியிருந்தால் (புள்ளிகள் 4)
(மொத்தம் புள்ளிகள் 10)

5. I. பூச்சக்கரம், விழுது வரிசை, நூல் இழுக்கும் ஊசி, பாவோடு குடம்
இரண்டு எழுதியிருப்பின் (புள்ளிகள் 2)

II. கறை அகற்றல்
பசை அகற்றல்
வெளிறச்செய்தல்
இதில் ஒன்றைப் பற்றி விளக்கம் எழுதியிருந்தால் (புள்ளிகள் 4)

III. பென்குயின் ஒன்றை தயாரிப்பதற்கான துணியை தெரிவு செய்தல் தொடக்கம் நிர்மாணத்தின் நிறைவு வரை படிமுறையில் எழுதியிருப்பின் (புள்ளிகள் 4)
(மொத்த புள்ளிகள் 10)

6. I. சட்டி, பானை, கூசா, செங்கல், அலங்கார பொருட்கள் போன்ற ஏதேனும் 2 ஐ பெயரிட்டிருந்தால் (புள்ளிகள் 2)

II. வர்ணம் பூசுதல், அச்சுப்பதித்தல், ஸ்டென்சில் அச்சிடல், கடதாசி அலங்காரம், வேறு பொருட்களை ஒட்டி அலங்கரித்தல். போன்ற ஏதேனும் 4 எழுதியிருப்பின் (புள்ளிகள் 4)

III. பொருத்தமான விடையை விளக்கப்படங்களுடன் எழுதியிருத்தல் (புள்ளிகள் 4)
(மொத்த புள்ளிகள் 10)

7. I. சிறுபுடைப்பு, அரைபுடைப்பு, முழு புடைப்பு (புள்ளிகள் 2)

II.

இடவசதி	இணக்கப்பாடு
கவர்ச்சி தன்மை	சமநிலை
அளவு விகிதம்	வித்தியாசம்
பூரணபாடு	இடம்

இதில் நான்கை எழுதியிருந்தால் (புள்ளிகள் 2)
இரண்டை விளக்கியிருந்தால் (புள்ளிகள் 2)

III. பொருத்தமான சிற்பம் நிர்மாணிக்கும் முறையை படிமுறையில் எழுதியிருந்தல். (புள்ளிகள் 4)
(மொத்த புள்ளிகள் 10)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank